# Is the Vali Boon in Kambaramayanam True?

**Dr. G. Mangaiyarkkarasi***
*Assistant Professor*
*Agurchand Manmull Jain college (Shift II)*
*Meenambakkam, Chennai – 600 061.*
*eMail: gmangaichennai@gmail.com, ORCiD: https://orcid.org/0000-0002-0895-0460,*

***Corresponding Author Email:** aravindanbu4321@gmail.com

**ARTICLE INFO**
*Article history:*
Received
December 24, 2025
Revised
December 24, 2025
Accepted
December 26, 2025
Published
January 01, 2026

**ABSTRACT**

At the outset Hanuman, Vaali, Veedana, and Ravana say that Vali has been blessed with a Boon from Lord Shiva that half the strength of his opponent would be gained by him in direct combat. Because of this belief only Rama broke the War Dharma and killed Vaali by hiding himself behind a tree during the course of war between Vali and his own Brother Sugreevaa. But on hearing fact that Vaali had won his battle with Dhundhubi after 12 months and another win over Mayavi has been finally achieved only after his vigorous fight for 28 months, we could be aware of the reality that there lies no Truth about Lord Shiva's Boon for Vaali as quoted in the Epics.

**Key words**: *Sugreeva, Vali, Rama, Dhundhubi, Mayavi.*

**References:**

1. Gnanachandraratharasu, A. A. Kamban Pudhiya Thedal. Tamilcholai Publishing House, 2012.
2. Gnanasambandhan, A. S. Raman: Panmuga Nokkil (In a Multifaceted Perspective). Charu Publishing House, 2016.
3. Mangaiyarkkarasi, G. "Kambaramayanaththil Vaaliyin Maatchiyum, Veezhchiyum (Vali's Glory and Fall in Kambaramayana)." Geotamil, www.geotamil.com/index.php/2021-02-11-18-03-56/8107-03. Accessed 29 Dec. 2025.
4. Mangaiyarkkarasi, G. "Kambaramayanththil Por Aram (War Virtue in Kambaramayanam)." Arane Journal, www.aranejournal.com/article/294. Accessed 29 Dec. 2025.
5. Poovannan. Kambaramayanam Moolamum Thelivuraiyum (Source & Version). Vols. 2-8, Varthamanan Publication, 2011.
6. Selvam, Ko. Kamban Phudayal. Charu Publishing House, 2016.

Journal Homepage: https://tamilmanam.in/journal/
This is an open access article under the License Creative Commons Attribution 4.0 International License
http://Creativecommons.org//license/by/4.0/

# கம்பராமாயணத்தில் வாலி வரம் உண்மையா?

***முனைவர் க.மங்கையர்க்கரசி**, உதவிப்பேராசிரியர்,
அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி(சுழல்-II), மீனம்பாக்கம், சென்னை 600061.

**ஆய்வுச்சுருக்கம்**

வாலி எதிரில் நின்று யார் சண்டையிட்டாலும் அவர்களின் வலிமையில் பாதி அவனுக்கு வந்துவிடும் வரத்தை சிவபெருமானிடமிருந்து பெற்றவன் என்று முதலில் அனுமனும், வாலியும், வீடணனும், இராவணனும் கூறுகிறார்கள். இராமனும் அவ்வரத்தை நம்பியதாலேயே சுக்ரீவனுக்கும், வாலிக்கும் இடையே சண்டை நடந்த போது மறைந்திருந்து அறத்தையும் மீறி வாலியை வதம் செய்தான். வாலி, துந்துபியுடன் சண்டையிட்டபோது (ஈராறு மாதங்கள்) 12 மாதங்களும், மாயாவியுடன் 28 மாதங்களும் சண்டையிட்டே இறுதியில் வென்றான் என்கிற போது வரம் உண்மையாக இருக்கவில்லை என்பதையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

**கருச்சொற்கள்:** சுக்ரீவன், வாலி, இராமன், துந்துபி, மாயாவி.

**முன்னுரை**

கம்பராமாயணத்தில் வாலி வதம் குறித்து அனைவரும் அறிந்திருக்கிறோம். வாலி வரம் உண்மையா? வாலியின் எதிரில் நின்று யார் சண்டையிட்டாலும் அவர்களின் பலத்தில் பாதி வாலியைச் சென்றடையும் வரம் பெற்றவன் என்று கம்பராமாயணம் கூறுகிறது. உண்மையிலேயே வாலி அப்படி ஒரு வரம் பெற்றவனா? அல்லது அப்படி மற்றவர்களை நம்ப வைத்தானா? வாலியின் தோற்றம் மற்றும் வேறு பல வரங்கள் மற்ற சிறப்புக்களைப் பார்த்து இதுவும் உண்மையாக இருக்கும் என்று மற்றவர்களும் ஏன் இராமனும் நம்பினானா என்பது குறித்தும், இக்கருத்து தொடர்பாக முதன் முதலில் இராமனிடம் பேசியது அனுமன்தான். உண்மை என்ன என்பதை கம்பராமாயணத்தின் மூலம் ஆராய்வதே இவ்ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வாலி வரம் குறித்து பேசியவர்கள்**

முதலில் அனுமனும் பின் வாலியும், வீடணனும், இராவணனும், இராமனும் பேசினர்.

**வாலியின் ஆற்றல் குறித்து இராமனிடம் கூறும் அனுமன்**

முதன் முதலில் வாலியின் ஆற்றல் குறித்து கூறுபவன் அனுமனே. நட்பு கோட்படலத்தில் வாலியின் ஆற்றல் கூறும் அனுமன் (பொய் இல்லாதவன், சொல்லின் செல்வன் என்றெல்லாம் இராமனால் புகழப்படும் அனுமன்), அந்த இராமனிடம், வாலியின் மாட்சியைக் குறித்துப் பேசுகிறான். அப்போது அவன் போரில் தன்னுடன் எதிரில் எதிர்ப்பவர்கள் வந்தால், அவர்களிடம் உள்ள வலிமையில் பாதி அளவைத் தான் அடையும் படியான வரத்தைப் பெற்றவன். எட்டு திக்குகளின் எல்லை வரையும் நாள்தோறும் சென்று, அங்குள்ள அட்ட மூர்த்தி எனப்படும் சிவபெருமானின் திருவடிகளை வணங்கும் அன்பை உடையவன் என்று கூறுகிறான்.(லிங்க் : www.geotamil.com/index.php/2021-02-11-18-03-56/8107-03)

“கிட்டுவார் பொரக்கிடைக்கின் அன்னவர்
**பட்ட நல் வலம் பாகம் எய்துவான்**
எட்டு மாதிரத்து இறுதி நாளும் உற்று
அட்டமூர்த்தி தாள் பணியும் ஆற்றலான்”

(நட்புக் கோட்படலம் 117)

இச்செய்தியை முதலில் அனுமனே, இராமபிரானிடம் கூறுகிறான்.

**வாலியின் ஆற்றலை வாலியே கூறல்**

சுக்ரீவன் சண்டைக்கு அழைத்த போது ஏளனச் சிரிப்போடு வாலி புறப்பட்டு வந்தான். அவன் மனைவி தாரை வந்து தடுத்து பேசியபோது, வாலி நான் பாற்கடலை மந்திரமலை கொண்டு கடைந்து தேவர்களுக்கு அமுதம் வழங்கியதன் பெரு வலிமையையும், தனக்கு தேவரும், அவுணரும் தோற்ற திறத்தையும் தன்னை எதிர்க்கத் துணிந்தவர்களின் வலிமையிலும் வரங்களில் பாதி தனக்கு வந்துவிடும்

என்பதனையும் கூறி, நீ துயர் ஒழிக என்கிறான். அதனால் என்னைப் பகைத்துப் போரிடுவது அவர்களால் எவ்வாறு முடியும். ஆகையால் நீ கொண்ட துயரத்தை விடுவாயாக என்றான்.

"பேதையர் எதிர்குவர் எனினும் பெற்றுடை
ஊதிய வரங்களும் உரமும் உள்ளதில்
**"பாதியும் என்னதால் பகைப்பது எங்ஙனம்**
நீ துயர்ஒழிக என நின்று கூறினான்"

(வாலி வதைப் படலம் 255)

இரண்டாவதாக வாலியேத் தன்னைப் பற்றி தன் மனைவி தாரையிடம் பெருமையாகக் கூறினான்.

**வாலியின் ஆற்றல் குறித்து வீடணன் கூற்று**

இராவணன் மந்திரப் படலத்தில் எல்லையில்லாத வன்மை கொண்ட மன்னனே, மிக உயர்வான கைலாயமலையை நீ பெயர்த்து எடுத்த முற்காலத்தில் நான்கு தோள்களை உடைய நந்தி இட்ட சாபத்தால் வால் உள்ள பெரிய குரங்குகளால் உனக்குக் கேடு உண்டாகும் எனும் அதனை வாலியிடம் நீ தோல்வி கண்டதால் அறிந்தோம் என்று கூறினார். (இராவணன் மந்திர படலம் 91)

மூன்றாவதாக வாலியின் பெருமையை வீடணன், இராவணனிடம் கூறினான்.

**வாலியின் ஆற்றல் குறித்து இராவணன்**

இராவணன், வாலியிடம் தோற்றுமைக்குக் காரணம் கூறுகிறான். வாலி சிவபெருமானிடம் வழிபட்டு அவரிடமிருந்து வரம் பெற்றான். தன்னை எதிர்ப்பவருடைய வரங்களின் வலிமையும், உடல் வலிமையும் அவர்களை விட்டு தன்னிடம் வந்து சேருமாறு வரம் பெற்றிருந்ததை அறியாமல் அவனோடு போரிடச் சென்றமையால், வாலியிடம் தான் தோற்றதாக இராவணன் கூறுகிறான்.

"அரங்கில் ஆடுவார்க்கு அன்பு பூண்டுடை வரம் அறியேன்
இரங்கி யான் நிற்ப என் வலி அவன்வயின் எய்த
**வரம் கொள் வாலி பால் தோற்றனென் மற்றும் வேறு உள்ள**
குரங்கு எலாமெனை வெல்லும் என்று எங்ஙனம் கோடி"

(இராவணன் மந்திரப் படலம் 118)

இதிலிருந்து வாலியின் வரத்தைக் குறித்து முதலில் அனுமனும், பின்பு வாலியும், வீடணன், இராவணன் கூற்றிலிருந்து அறிய முடிகிறது.

**வாலி-துந்துபி போர்**

மயன் மகனான துந்துபி தலையில் கொம்பு உடையவன். துந்துபி எனும் பெயரைக் கொண்ட பிறரை அழிக்கும் சினத்தையுடைய அசுரன், வானத்தில் உள்ள சந்திரனைத் தொடுமாறு ஓங்கி வளர்ந்துள்ள, இரு கொம்புகளை உடையவனாய், மந்திரம் என்னும் மலைபோலச் சென்று பெரிய மீன்களை உடைய திருப்பாற்கடலின் நீர் சிந்துமாறு கரிய திருமாலைத் தேடுபவன் ஆனான்.

அங்கு திருமால் வந்து அந்தத் துந்துபியை நோக்கி,' நீ இங்கு வருவதன் காரணம் யாது என்று வினவினார். துந்துபி என்னுடன் போர் செய்ய வருவாயாக' என்று சொன்னார். அப்போது திருமால் 'கங்கைக்குத் தலைவனும் விடம் உண்டதால் கழுத்து கருத்தவனுமான சிவனே உன் போன்றோரின் கொடிய வலிமைக்குத் தக்கவாறு போர் செய்ய வல்லவன் என்று கூறினார். அதனால் அந்தத் துந்துபி விரைந்து சென்று, சிவபெருமானின் கயிலாயத்தைத் தன் கொடிய கொம்புகளால் முட்டிப் பாய்ந்து எழுந்தான். அவ்வளவில் அவன் எதிரில் சிவபெருமான் தோன்றி "உன் குறையாது சொல்வாயாக" என்று வினவினார். அதற்கு அவன் 'முடிவற்ற கொடிய போரை எனக்குத் தர முயல்வாயாக' என்று கூறினார். அப்போது சிவபெருமான் துந்துபியைப் பார்த்து 'தலைமையும் வலிமையும் மிக்க உன்னுடனே என்னால் போர் செய்ய முடியாது. ஆதலால் நீ தேவர்களிடம் செல்வாயாக' என்று சொல்லி அனுப்பினார்.

அந்த அசுரனும் அப்படியே சென்று தேவர்களைப் போருக்கு அழைத்தான். வானுலகத்தில் உள்ளவர்களுக்குத் தலைவரான இந்திரன் அவனை நோக்கி,' நீண்ட காலம் போர் செய்ய விரும்புவாயானால் இங்கு வராதே, போருக்குரிய வாலி என்பவரிடம் செல்வாயாக' என்று கூறி அனுப்பினான். இங்ஙனம் இந்திரன் சொல்லி அனுப்பிய துந்துபி மகிழ்வுடன் உருசியமுகம் வந்தான். 'குரங்குகளுக்குத் தலைவனே என்னுடன் போர் செய்வாயாக' என்று சொல்லி அம்மலையைப் பலவாறு அழித்தான். என் அண்ணனான வாலி சினம் கொண்டு அவன் எதிரில் சென்று போர் செய்த போது வாலியும், துந்துபியும் இடதுசாரி வலது சாரியாக போர் செய்து சுழலும் போது, அவ்வேகத்தால் இவர்கள் இன்னார் என்று ஒருவரும் அறியவில்லை. எந்த உலகத்தில் சென்றாலும் அஞ்சும் தன்மை இல்லாத அவர்கள் கீழே விழுவார்கள். மீண்டும் எழுந்து நிற்பார்கள். அவர்களைக் கண்டு அசுரர்களும், வானவர்களும் அஞ்சி ஓடினார்கள். அவர்கள் தங்கள் அடிகளை எடுத்து வைத்ததால் தீ வானத்தை அளாவ எழுந்தது. அவர்கள் செய்த ஆரவாரம் பெரிய திக்குகளை எல்லாம் சென்று பரவியது. எழுந்த தீயின் புகை எங்கும் உடனே பரவியது. நீர் நிறைந்த கடலும், பெரிய மலைகளும், தன் நிலை கெட்டன. அத்தகைய போரைச் செய்யும் பொழுதில் வெற்றியை உடைய வாலியும் தன் தோள்களின் வன்மையுடன் அந்தத் துந்துபியினது திக்குகளில் அளாவும் இரண்டு கொம்புகளையும் பற்றிப் பிடிங்கி அவற்றாலேயே அவனை அடித்தான். அந்தத் துந்துபி மேகத்தில் உண்டான இடிபோல முழக்கமிட்டான்.

ஓராண்டு காலம் போரிட்டு அவனுடைய கொம்புகளைப் பிடுங்கி அவற்றாலேயே அவன் தலையில் அடித்து, தலையைப் பிளந்து அவன் உடலைச் சுற்றி எரிந்தான். அதிலிருந்து வெளிப்பட்டு வந்த குருதி கொழுப்பும் தசைகளும் நாலா புறமும் சிதறின.

"புயலும் வானகமும் அப் புணரியும் புணரி சூழ்
அயலும் வீழ் தூளியால் அறிவருந் தகையவா
மயனின் மாமகனும் வாலியும் மறத்து உடலினார்
**இயலும் மாமதியம் ஈர் ஆறும் வந்து எய்தவே"**

(துந்துபிப் படலம் 3997)

வாலி அவனை எடுத்துச் சுழற்றி அடித்தான் அவன் மேகமண்டலத்தைத்தாண்டி வீசி எறிந்தான். அவன் உயிர், மேல் உலகத்துக்குச் செல்ல, உடல் இம்மண்ணுலகத்தில் வீழ்ந்தது.

“வயிர வன் கரதலத்து அவன் வலித்து எறிய அன்று
உயிரும் விண் படர இவ் உடலும் இப்பரிசுஅரோ”

(துந்துபிப் படலம் 190)

வாலி வரம் உண்மையானால் துந்துபியுடன் நேருக்கு நேர் சண்டையிட்டு வெல்ல அவனுக்கு சில நிமிடங்களே போதுமானது. ஒரு வருடம் வரை சண்டை என்பது தேவையில்லாதது. துந்துபியுடன் ஏற்பட்ட சண்டையில் இறுதியில் வாலியே வென்றான் என்றாலும், ஒரு வருடகாலம் சண்டையிட்டே வென்றான் என்று கம்பரேக் கூறியுள்ளார்.

**வாலி-மாயாவி போர்**

கொடிய ஓர் அசுரரான மாயாவி என்பவன் வாலியுடன் போரிட்டான். அந்த மாயாவி, வாலியுடன் எதிர்த்து போர் செய்து நின்ற போது, தன் வலிமையை விட, வாலியின் வன்மை மிக்கிருந்த காரணத்தால் அவனது வலிமைக்கு எதிரில் நிற்க அஞ்சி, இவ்வுலகில் இருந்தால் வாழ்வது அரிதாகும் என்று எண்ணி, உள்ளம் வருந்தி ஓடிப்போய் பிறர் நெருங்குவதற்கு அரிய ஒரு குகைக்குள் புகுந்தான்.

இங்ஙனம் மாயாவி குகைக்குள் புகுந்த போது சினம் மிக்க வாலி, சுக்ரீவனைப் பார்த்து 'வலியவனே யான் அந்தக் குகைக்குள் புகுந்து அங்கே புகுந்திருக்கும் மாயாவியை விரைவில் பிடித்துக் கொண்டு வருவேன். நீ சிறிது நேரம் வேறொரு வகையில் அம் மாயாவி தப்பிச் சென்று விடாதபடி, இக்குகை வாயிலில் காவல் செய்வாயாக' என்று கூறிவிட்டு விரைவாகக் குகைக்குள் புகுந்தான். வாலியும் சென்று 28 மாதங்கள் வரையிலும் கொடிய அந்தக் குகைகள் வேகத்துடன் தேடிப் பார்த்து அம் மாயாவியை வெல்வதை விரும்பி அம் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். தம்பியான சுக்ரீவனோ துன்பமடைந்து கலங்கினான்.

**“ஏகி வாலியும் இருது ஏழொடு ஏழ்**
வேக வெம் பிலம் தடவி வெம்மையான்
மோக வென்றி மேல் முயல்வின் வைகிடச்
சோகம் எய்தினன் துணை துளங்கினான்”

(நட்புக் கோட் படலம் 130)

இதையும் அனுமனே, இராமனிடம் கூறினான்.

வாலியின் எதிரில் நிற்பவர்களை பலத்தில் பாதி அவனை வந்தடையும் என்ற கூற்று உண்மையானால் சில நாட்களிலேயே வாலி வென்றிருக்க வேண்டும். வாலி துந்துபியுடன் சண்டையிடும் போதும், மாயாவியுடன் சண்டையிடும் போதும் இருவர் மட்டுமே இருந்தனர். பிலத்தினுள் இருந்த மாயாவியும், வாலியும் சண்டையிடும் போதும் வாலியே வென்றான் என்றாலும், 28 மாதங்கள் ஆகியும்

வாலி வென்று வெளியே வரவில்லை அவர்கள் இருவருக்கு மட்டுமே போர் நடைபெற்றது என்ற போது, நாம் சற்று சிந்திக்க வேண்டியுள்ளது.

**வாலியைக்கண்ட இராமன் கூற்று**

வாலி கதிரவன் போல, தூணிலிருந்து தோன்றிய நரசிங்கமூர்த்தியையும் போல வந்தான். வாலியைக் கண்ட இராமன், லக்ஷ்மணனை நோக்கி ஐயனே நீ நன்றாகக் காண்பாயாக அசுரர்களும், தேவர்களும் இருக்கட்டும் இவ்வுலகத்தில் வெவ்வேறாக உள்ள எந்தக் கடல்தான், எந்த மேகம் தான், எந்த காற்று தான், கொடிய எந்த தீதான் இந்த வாலியின் உடலை ஒக்கும் என்று வியந்து கூறினான்.

"அவ்வேலை இராமனும் அன்புடையத் தம்பிக்கு ஐய
செவ்வே செல நோக்குதி தானவர் தேவர் நிற்க
எம்வேலை எம் மேகம் எக் காலொடு எக்கால வெந்தீ
வெவ் வேறு உலகத்து இவர் மேனியை மானும் என்றான்"

(வாலி வதைப்படலம் 266)

முதன் முதலில் வாலியைப் பார்த்த அவன் தோற்றத்தைப் பார்த்தே இராமன் இவ்வாறு கூறினான்.

**வாலியின் கேள்வி**

இராமன், வாலி மீது மறைந்து நின்று அம்பினைச் செலுத்தினான். அம்பு பட்டு கீழே விழுந்த வாலி, இராமனிடம், ஒரு போரில் இரு வீரர் எதிர்த்து நிற்கும் போது அவ்விரண்டு பேரையும் ஒரு சமமாக நல்ல உறவினராக கொள்வது சிறந்தது. நீ அவ்வாறு கருதுவதற்கு மாறாக அவ்விருவருள் ஒருவர் மீது கருணை கொண்டு, மற்றவர் மீது மறைந்து நின்று வில்லை வளைத்து கூரிய அம்பை மார்பில் பாய்ச்சுதல் அறமாகுமோ இது தக்கதன்று என்று கருதப்படும் பட்சாதாபமே ஆகும் என்று கூறினார்.

"இருவர் போர் எதிரும் காலை இருவரும் நல் உற்றாரே
ஒருவர் மேல் கருணை தூண்டி ஒருவர் மேல் ஒளித்து நின்று
வரி சிலை குழைய வாங்கி வாய் அம்பு மருமத்து எய்தல்
தருமமோ பிறிது ஒன்று ஆமோ, தக்கிலது என்னும் பக்கம்"

(வாலி வதைப்படலம் 317)

வாலி கேட்கும் போது இராமன் பதில் உரை மறுப்புரையாக பல கூறினான். இறுதியில் இராமன் உரையைக் கேட்ட குரங்குகளுக்கு அரசனான வாலியும், இராமனை நோக்கி மாட்சிமையுடைய நல்லோர் அப்படியே ஆகட்டும். நீ சொன்னபடியே நான் குற்றம் செய்தவனாக இருக்கட்டும் போர்க்களத்தில் எதிரில் நின்று அம்பை எய்யாமல், கொடிய வேடர்கள் மறைந்து நின்று விலங்குகளின் மீது அம்பை எய்வது போல நீயும் மறைந்து நின்று வில்லால் அம்பை எய்துவதற்குக் காரணம் யாது என்று வினவினார்.

"அவ் உரை அமையக் கேட்ட அரிகுலத்து அரசும் மாண்ட
செவ்வியோய் அனையது ஆக செருக் களத்து உருத்து எய்யாதே
வெவ்விய புளிஞர் என்ன விலங்கியே மறைந்து வில்லால்
எவ்வியது என்னை என்றான் இலக்குவன் இயம்பலுற்றான்" (வாலிவதைப்படலம் 350)

என்பதிலிருந்து இராமனும் வாலி பெற்றிருந்ததாகக் கூறப்பட்ட வரத்தை நம்பினான் என்பதாலேயே மறைந்திருந்து அம்பினைச் செலுத்தினான் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

வாலி இறந்த செய்தியை அறிந்து அங்கு வந்த தாரை பலவாறாக ப்புலம்பினாள். அரிய மருந்தைப் போன்ற மற்றவர்களின் ஆபத்தை நீக்கும் வில்லாற்றலில் வல்ல இராமன், எந்த வீரனுக்கும் தகாத செயலைச் செய்துவிட்டார். அறவழி பொருந்திய பெருமையோ, பெரியோருக்கெல்லாம் அவரவர் செய்யும் செயலே அவரவரின் பெருமையான பொன்னின் மாற்றை அறிவதற்கு ஏற்ற உரைகல்லாகும் என்பதெல்லாம் நடைமுறைக்கு ஒத்துப் போகாத வெறும் கட்டுப்பாட்டுச் சொல்தானோ என்று கேட்கிறாள்.

"அருமைந்து அற்றம் அகற்றும் வில்லியார்
ஒரு மைந்தற்கும் அடாத துன்னினார்
தர்மம் பற்றிய தக்கவர்க்கு எலாம்
**கருமம் கட்டளை என்றல் கட்டதோ"**

(வாலி வதைப்படலம் 402)

இதிலிருந்து இராமன், வாலியை மறைந்து நின்றுதான் கொன்றான் என்பதை கூறுகிறார் என்பது பெற முடிகிறது. அதையும் தாரை அறிந்திருந்தாள் என்பதையும் நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**இராமன், இலட்சுமணன் பதில்**

வாலியின் வினா ஒவ்வொன்றிற்கும் இராமன் விடையளித்தான் இறுதியாக இராமன் உரையைக் கேட்ட குரங்குகளுக்கு மன்னனான வாலியும் இராமனை நோக்கி மாட்சிமையயுடைய நல்லோய் அப்படியே ஆகட்டும். நீ சொன்னபடியே நான் குற்றம் செய்தவனாக இருக்கட்டும், போர்க்களத்தில் எதிரில் நின்று அம்பை எய்யாமல் கொடிய வேடர்கள் மறைந்து நின்று விலங்குகளின் மீது அம்பை எழுதுவது போல, நீயும் மறைந்து நின்று வில்லால் அம்பை ஏய்துவதற்குக் காரணம் யாது என்று வினவினார். அதற்கு இலட்சுமணன் விடை கூறலாமா? (வாலி வதைப்படலம் 350)

அவன் வாலியை நோக்கி முன்பு உன் தம்பி சுக்ரீவன் வந்து அடைக்கலம் அடைய, அப்போது இராமன் நீதிநெறி இல்லாத உன்னைக் கொல்வதாக அவனுக்கு வாக்குறுதி அளித்தான். பின்பு நீயும் போரில் இராமனிடம் வந்து நானும் உனக்கு அடைக்கலம் என்று கூறலாம் என்று நினைத்தே அவன் மறைந்து நின்று அம்பு எய்தினான் என்று கூறினான்.

"அன்பினை உயிருக்கு ஆகி அடைக்கலம் யானும் என்றி
என்பது கருதி **அண்ணல் மறைந்து நின்று எய்தது என்றான்"**

(வாலி வதைப் படலம் 351)

வாலி, இராமனிடம் வினா எழுப்ப, இலட்சுமணன் பதில் அளித்தான் என்றால், இராமனால் வாலிக்கு பதில் அளிக்க இயலவில்லை என்பதும் பெறப்படுகிறது.

**தன் தவறை இராமனே ஒப்புக்கொள்ளல்**

அரசியல் படலத்தில் கிட்கிந்தையின் மன்னனாக முடி சூட்டப் பெற்ற சுக்ரீவன், இராமனையும் தன்னுடன் நாட்டுக்குள் வர அழைத்தான். அப்போது நாட்டுக்குள் வருவதில்லை என பலவாறாக உரைத்த இராமன், இல்வாழ்க்கையைத் துறவாதவரின் தன்மையை இழந்தும், **போரில் வில்லைக் கொண்டு செய்யும் அறத்தைச் செய்யாது நீங்கியும்,** வாழ்பவனான எனக்கு, நகரத்தில் நண்பர்களுடனே வாழ்தல் முதலியவை சிறப்பில்லாத அர்ப்ப குணங்களாகும். மனைவியைப் பிரிவதற்குக் காரணமான நான் செய்துள்ள தீவினைகள் நீங்குமாறு நல்ல அறமாகிய இல்லறத்தைத் துறந்து நீங்குமாறு, மேற்கொள்ளும் வானப்பிரத்த ஒழுக்கத்தில் குற்றம் இன்றி தவம் செய்வேன் என்று இராமன் கூறினான்.

“இல்லறம் துறந்ததிலாதோர் இயற்கையை இழந்தும் போரின்
**வில்லறம் துறந்தும் வாழ்வேற்கு இன்னன மேன்மையில்லாச்**
சில்லறம் புரிந்து நின்ற தீமைகள் தீருமாறு
நல்லறம் தொடர்ந்த நோன்பின் நவையற நோற்பல் நாளும்”

(அரசியல் படலம் 429)

**இராமனும், வாலி மீது மறைந்து நின்று அம்பு எய்தியது தவறு என்று குறிப்பிடுகிறான். வாலி வரம் குறித்து நம்பியதே அவன் மறைந்து நின்று அம்பு எய்துவதற்குக் காரணம் என்பதை நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.**

இராமனிடம் வாலி பலவாறாகக் கேள்விக்கணைகளைத் தொடுத்தான். அவனுக்குப் பலவாறாக பதில் அளித்த இராமன், நீ அவன் மனைவியைக் கைக்கொண்டு அவனைக் கொல்வதற்காகப் பின் தொடர்ந்தாய். ரிசியமுகபர்வதத்துக்கு நீ வந்தால் இறந்து விடுவாய் எனும் சாபம் உனக்கு இருப்பதால் நீ அங்கு வரமாட்டாய் என எண்ணியே அங்கு சென்று தங்கினான்

சுக்ரீவன். நீ அவன் மனைவியையும் அவனுக்கு உரிய உடைமைகளையும் பற்றிக் கொண்டதால் அவன் என் துணையை வேண்டினான். வலியவரால் துன்புறும் எளியவருக்கு உதவுவதும் அறமாகும் என்று எண்ணி, உன்னைக் கொன்று அவனுக்கு உதவும் முயற்சியை மேற்கொண்டேன் என்றான்.

**போர்அறம்**

பெண்களை, வயதானவர்களை, அந்தணர்களைக் கொல்லக்கூடாது. எதிர்,எதிர் நின்று ஒருவர் ஒருவரோடு தான் சண்டையிடவேண்டும். பயந்து போய் புறமுதுகிட்டு ஓடினால் விட்டுவிடவேண்டும். பின்னால் சென்று தாக்கக்கூடாது. மார்பில் காயம் ஏற்படுவதையேப் பெருமையாகக் கொண்டனர். முதுகில் காயம் ஏற்படுவது இழிவாகக் கருதப்பட்டது. ஆயுதமின்றி இருப்பவனையும், சுயநினைவில்லாமல் மயக்கமாக இருப்பவனையும் கொல்லக்கூடாது. பசுவைக் கொல்லக்கூடாது. தூதரைக் கொல்லக்கூடாது. மனிதகுல உயிராக இல்லாமல், அரக்கர்குல உயிராயினும். அதனையும் துன்புறுத்தக்கூடாது என்கிறார்.

"மாதரைக் கோறலும் மறத்து நீங்கிய
ஆதரைக் கொறலும் அழிவு செய்யினும்

தூதரைக் கோறலும் தூய்தன்றாம் என
ஏதுவில் சிறந்தனஎடுத்துக் காட்டினான்"

(வீடணன் அடைக்கலப்படலம் 400)

தமிழர்களைப் பொறுத்தவரைப் போர் என்பது சமமானவர்களுக்கிடையே நடைபெறுவது. அதனாலேயே போரைச் “**சமம்**” என்று அழைத்தார்கள்

"அருஞ்**சமம்** சிதைய மிக்க"(புறநானூறு)

**சீவக சிந்தாமணியில் ஒரு காட்சி**

"வீரின்மையின் விலங்காமென மத வேழமும் எறியான்
ஏறுண்டவர் நிகராயினும் பிறர் மிச்சில் என்று எறியான்
மாறன்மையின் மறம் வாடுமென்றுஇளையாரையும் எறியான்
ஆறன்மையின் முதியாரையும் எறியான் அயில் உழவன்"

(மண்மகள் இலம்பகம் 2261)

வேலைக் கையில் பிடித்திருக்கும் வீரன், களத்திலிருக்கும் மத யானை மீது அது விலங்கு என்பதால் அதனைத் தாக்குதல் இழுக்கு என்பதால் வேலை எறியாமல் இருக்கின்றான். ஏற்கனவே காயம் பட்டிருக்கும் எதிர் வீரன், அவ்வீரனுக்கு நிகராயினும் அவன் உடலில் காயம் பட்டிருப்பதால் அவன் அடுத்தவன் சாப்பிட்டு வைத்த எச்சில் சாப்பாடு என கருதி அவனோடும் போரிட மாட்டான். போர் நெறிக்குரிய வீரம் குறைவுபடும் என்று தன்னிலும் இளையோர்களோடும் போரிட மாட்டான். அறவழிக்குப் புறம்பானது என்பதால் தன்னைவிட முதியோர்களோடும் போரிட மாட்டான் என்று பாடுகிறார்.

இந்த வகையில் பார்த்தால் வாலி பெற்ற வெற்றி எல்லாம் வெற்றியாகாது. காரணம்

"கிட்டுவார் பொரக்கிடக்கின் அன்னவர்
பட்ட நல்வலம் பாகம் ஏதுவான் வாலி"

(நட்புக்கோட்படலம் 117)

வாலி அவனோடு போருக்கு எதிர் வருபவனிடமிருந்து பாதி பலத்தைப் பெற்றுவிடும் வர வலிமை பெற்றவன் ஆதலால் அவன் போர் வெற்றி அறத்திற்கு உட்பட்டது அல்ல.

வாலிக்கு பயந்து போய் சுக்ரீவன் ஓடிச் சென்றபோது பின்னாலேயேத் துரத்திச் சென்றான். பயந்து ஓடி சென்றவர்களைப் பின்தொடரக்கூடாது என்ற போர் நெறியையும் மறந்தான். அங்கு சென்றால் மதங்க முனிவர் கொடுத்த சாபத்தினால் தான் இறந்து விடுவோம் என்ற நிலையில் அவனை அப்படியே விட்டுவிட்டு அரண்மனை திரும்பினான் வாலி. மாயாவி, வாலிக்கு பயந்து எதிர்த்து நிற்க முடியாமல் பிலத்திற்குள் சென்றபோதும் விடாமல் துரத்தி சென்று 28 மாதங்கள் போரிட்டு அவனைக் கொன்றான் என்பது போர் அறம் மீறிய செயலாகும்.

கம்பராமாயணத்தில் இடம் பெற்றுள்ள மற்ற பாத்திரங்கள் அனைத்தும் போர் அறத்தைப் பின்பற்றின.
(லிங்க்; https://www.aranejournal.com/article/294)

Tamilmanam

**முடிவுரை**

போர் அறத்திற்கு உட்பட்டதல்ல என்றாலும் துந்துபி, மாயாவி இருவர் இடையேயும் வாலி முறையே ஓராண்டு, 28 மாதங்கள் தொடர்ந்து போர் செய்த பின்பு வெற்றி பெற்றான் என்பதையும் நாம் அறிந்து கொள்ள முடிகிறது வாலியைப் பார்க்கும்போது அவருடைய தோற்றம், அவன் பெற்ற பல வரங்களைக் கொண்டே இவ்வரத்தையும் அவன் பெற்றிருப்பான் என்று அனைவரும் நம்பியதையும் நாம் தெரிந்து கொள்ள முடிகிறது. வாலியின் வரம் அவனோடு போருக்கு எதிர் நிற்பவர்களின் பாதி பலம் அவனை வந்தடையும் வர வலிமை பெற்றவன் என்பது உண்மை அல்ல என்பதையும் போர் அறத்தையேப் பின்பற்றாதவன் என்பதையும் இவ்ஆய்வுக் கட்டுரையின் வழி நாம் அறிந்து கொள்ள முடிகிறது. காப்பியம் முழுவதுமே இராமன் அறத்தைப் போற்றி நடக்கிறான். அத்தகைய இராமனே போர் அறத்தை மீறியவனாக நடந்ததற்கு வாலி பெற்ற வரத்தை நம்பியதே. வில்லறம் துறந்ததை இராகவனே ஒப்புக்கொள்கிறான் என்பதைக் கம்பராமாயணமே பேசுகிறது. யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியேக் கண்ணை மூடிக்கொண்டு நம்பிவிடக்கூடாது ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று கம்பர் கூறியதையும் நாம் அறிந்து கொள்ளமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

1.செல்வம்.கோ,கம்பன் புதையல், சாரு பதிப்பகம், சென்னை 2016.

2.ஞானசந்தரத்தரசு அ.அ., கம்பன் புதிய தேடல், தமிழ்ச்சோலைப் பதிப்பகம், புதுக்கோட்டை, 2012.

3.ஞானசம்பந்தன் அ.ச இராமன் பன்முகநோக்கில், ,சாரு பதிப்பகம், சென்னை,2016.

4.பூவண்ணன், கம்பராமாயணம் மூலமும் தெளிவுரையும் தொகுதி ,2,3,4,5,6,7,8. வர்த்தமானன் வெளியீடு, சென்னை, 2011.

5. முனைவர் க. மங்கையர்க்கரசி - கம்பராமாயணத்தில் வாலி மாட்சியும் வீழ்ச்சியும் www.geotamil.com/index.php/2021-02-11-18-03-56/8107-03

6. முனைவர் க. மங்கையர்க்கரசி - கம்பராமாயணத்தில் போர் அறம் https://www.aranejournal.com/article/294

**Copyright Holder:**
© Author(s) (2026).

**First Publication Right:**
© Tamilmanam International Research Journal of Tamil Studies

**This article is under:**

Tamilmanam